# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2380/33 - 2024 අප්‍රේල් මස 19 වැනි සිකුරාදා - 2024.04.19

*2380/33 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்***

53 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2021ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 53 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் விதப்புரைகளைக் கருத்திற்கொண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் மேலும்–

(அ) அமைச்சரவை, 2024, ஏப்பிறல் 08 ஆந் திகதிய 24/0635/631/015 ஆம் இலக்க அதன் முடிபின் மூலம் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் வியாபாரத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமொன்றாகக் குறித்தலை அங்கீகரித்துள்ளது எனவும் ;.

(ஆ) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமொன்றாக அத்தகைய வியாபாரத்தைக் கருதுகின்றமைக்கான நியாயமான தன்மை இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவுள்ளது எனவும் ;

(இ) சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இதற்கான அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும் எனவும் ; அத்துடன்

(ஈ) குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் தொடங்குதலும் நடைமுறையில் இல்லாதொழிதலும் வேண்டும் எனவும்,

இக்கட்டளை மூலம் குறித்துரைக்கின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,

*2024, ஏப்பிறல் 19.*


1A - PG 6697 — 289 (2024/04)


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை I

### செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமொன்றாகக் குறிக்கப்பட்ட வியாபாரம் பற்றிய விபரங்கள்

| | |
|---|---|
| 1. அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயர் | இவ்வா பீடீஈ எல்டீடி (IVIVA PTE LTD) |
| 2. உரிம இல. | 2310250024 |
| 3. உரிமம் வழங்கப்பட்ட திகதி | 2023, திசெம்பர் 01<br>வியாபாரம் ஆரம்பிக்கின்ற திகதி உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் இருக்க வேண்டும்.<br>(2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட நபர்களின் பதிவுசெய்தல், உரிமம் வழங்குதல், அங்கீகாரம் வழங்குதல் மற்றும் ஏனைய அங்கீகாரங்கள் என்பவற்றிற்காக ஒழுங்குவிதிகளின் 27 ஆம் ஒழுங்குவிதியைப் பார்க்கவும்.) |
| 4. கரைகடந்த கம்பெனி பதிவு இலக்கம்: | பீசீசீ 00288843 |
| 5. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரத்தின் வகுப்பாக்கம் | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரம் |
| 6. விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களுக்கான உரித்துடைமை | இவ்வா பீடீஈ எல்டீடி செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரம் ஒன்றாக மட்டுமே குறிக்கப்படுகின்றதுடன் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதனிலை வியாபாரம் ஒன்றாகக் குறிக்கப்படுவதற்குத் தகவுடையதாகவில்லை. |
| 7. தகவுடைமைக் கட்டளைகள் | 2023, ஓகத்து 04 ஆந் திகதிய 2343/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2023ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்குவதன் மீதான வழிகாட்டுநெறிகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின் 4(2)(ஈ) மற்றும் 4(3)(ஆ) என்னும் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள். |
| 8. ஏற்புடையற்பாலதான விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்புத் திட்டம் | 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்குவதன் மீதான வழிகாட்டுநெறிகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட திட்டம். |

## அட்டவணை II

### செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாகக் கருதுவதற்கான நியாயமான தன்மை

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு (5) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 53 (5) இல் கூறப்பட்டுள்ளவாறு தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, கொழும்புத் துறைமுக நகரத்தை இஸ்தாபிப்பதன் வெற்றியை உறுதி செய்வதற்காக வியாபாரங்களை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமாக நியமிப்பதில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வா பீடீஈ என்பது சிங்கப்பூரின் ஈடெக் எஞ்சினியரிங் பிறைவேட் லிமிடெட் நிறுவனத்தின் முழுமையான உடமையுள்ள ஒரு துணை நிறுவனமாக சிங்கப்பூரில் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். தாய் நிறுவனமான ஈடெக் எஞ்சினியரிங் பிறைவேட் லிமிடெட் ஒரு தகவல் தொழில்நுட்ப நிறுவனமாகும் என்பதோடு இது பாரிஸ் உடன்படிக்கையால் ஒப்புக்கொள்ளப்பட்ட (காலநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாடு) குறைந்த - கார்பன் பொருளாதாரத்திற்குப் பரிமாற்றலடைவதற்கும் மற்றும் தேறிய பூஜ்ஜிய இலக்குகளை அடைவதற்கும் ஸ்மார்ட் நகர தகவல் தொழிநுட்பத்தால் இயக்கப்படுகின்ற தயாரிப்புகள் மற்றும் உலகளாவிய வாடிக்கையாளர்களின் பல்வேறு சேகரிப்புக்களை ஆதரிக்கும் தீர்வுகளை உருவாக்குகிறது. அங்கீகரிக்கப்பட்ட நபர் 1.2 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் ஆரம்ப முதலீட்டில் கொழும்புத் துறைமுக நகரத்தில் தங்கள் பிராந்திய தலைமையகத்தை நிறுவ விரும்புகிறது. இவ்வா பீடீஈ எல்டீடி நிறுவனம் கொழும்புத் துறைமுக நகரத்திற்குள் செயற்படத் தொடங்கிய முதல் வருடத்திற்குள் 45 வேலை வாய்ப்புகளை உருவாக்கும் உத்தேச 5 வருட காலக்கெடு முழுவதும் தொழிலாளர் வளர்ச்சிக்கான இந்த அர்ப்பணிப்புத் தொடர்ந்திருக்கும். இவ்வா பீடீஈ எல்டீடி இரண்டாம் ஆண்டில் மேலும் 14 நபர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிர்பார்க்கிறது. அதனைத் தொடர்ந்து அடுத்த 2 ஆண்டகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் 20 புதிய வேலை வாய்ப்புக்கள் மற்றும் ஐந்தாவது ஆண்டில்

*22 வேலை வாய்ப்புக்கள் என்றவாறு தொடர்ந்து அதிகரிக்கும். ஆறாவது ஆண்டில், நிறுவனம் மேலும் 29 பதவிகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இது மொத்த வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கையை அண்ணளவாக 150 ஆகக் கொண்டு வருகிறது. இந்த குறிப்பிடத்தக்க விரிவாக்கமானது தென்னாசியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு உள்ளடக்கிய உலகளாவிய இலக்கு சந்தைக்கு சேவை செய்யும் போது இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. மென்பொருள் பயன்பாடுகள் மற்றும் கருவிகள், ஸ்மார்ட் பணியிடங்களின் கலவை மற்றும் செயல்பாட்டிற்கான தொழில்நுட்பத் தளத்தை வழங்குதல், ஸ்மார்ட் கட்டிடங்கள் போன்றவை இவ்வா பீஊ எல்டீடி வழங்கும் சில தயாரிப்புக்கள் மற்றும் சேவைகள் ஆகும்.*

*இவ்வா பீஊ எல்டீடி நிறுவனம் மேலும் கொழும்புத் துறைமுக நகரத்தில் குறைந்த கார்பன் புத்தாக்க மையத்தை நிறுவ உத்தேசித்துள்ளது. இது உலகளவில் ஸ்மார்ட் கட்டிடங்கள் மற்றும் ஸ்மார்ட் நகரங்களுக்கான அதிநவீன தீர்வுகளை அபிவிருத்தி செய்யும் மற்றும் அதன் தயாரிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கான தொழில்முறை சேவைகளை உருவாக்குகிறது. இவ்வா பீஊ எல்டீடி நிறுவனம் சீமென்ஸ், ஜோன்சன்ஸ் கென்ட்ரோல்ஸ், ஏடப்ளியூஎஸ், சீபீஆர்ஈ, ஒரேன்ச், செம்ப்கோர்ப், ஜேஎல்எல் போன்ற உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பல நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது.*

**அட்டவணை III**

**சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகள்**

| *சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள்* | *வழங்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகள்* |
|---|---|
| 1. 2017ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் | அ) பகிர்ந்தளிக்கப்பட்ட எல்லா வருமானங்களும், இலாபங்களும் மற்றும் பங்கிலாபங்களும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.<br>ஆ) செலுத்தப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட பிடித்து வைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளும் உள்நாட்டுக் கொள்வனவுகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரிகளிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க. நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் உள்நாட்டுக் கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 6. (235 ஆம் அத்தியாயமான) சுங்க கட்டளைச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் உள்நாட்டுக் கொள்வனவுகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வை களிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வை களிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| 9. 1988 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 11. (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் | 2022,யுன் 3 ஆந் திகதிய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (கொழும்புத் துறைமுக நகரில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் தவிர்ந்த இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |

**அட்டவணை IV**

**வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களின் செல்லுபடியாகும் காலப்பகுதி**

| *சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள்* | *தொடங்கும் திகதி* | *முடிவுறும் திகதி* |
|---|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 6. (235 ஆம் அத்தியாயமான) சுங்க கட்டளைகள் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 11. (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் | 2024, ஏப்பிறல் 20 | 2049, ஏப்பிறல் 19 |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

EOG 04 - 0163

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.